**OS No. 225/2022**

**Date: 21.10.2024**

**PW1 காசிராஜன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிராது தபசில் சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் ஜோசப் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி ஜோசப்பிற்கு நான்கு ஆண்கள் வாரிசுகள் ஆவார். பெண் வாரிசு கிடையாது. மேற்படி நான்கு வாரிசுகள் பெயர்கள் சீவலன் என்ற சீனிவாசன், ஆதாம், இருளன், பாக்கியமுத்து ஆகும். வாதிகளில் 1 முதல் 13 வாதிகள் மேற்படி இருளன் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி சீவலன் என்ற சீனிவாசனுக்கு இருளன் என்பவர் வாரிசு ஆகும். சீவலன் என்ற சீனிவாசன் மகன் இருளன் மற்றும் ஜோசப் மகன் இருளன் என்பவரும் மாறுபட்ட நபர்கள் என்றால் சரிதான். வாதிகள் 14, 15 என்பவர்கள் சீவலன் என்ற சீனிவாசனின் வாரிசுகள் என்றால் சரிதான். 14, 15 வாதிகள் பெரும்பத்துார் என்ற கிராமத்தில் குடியிருந்து வருகின்றனர். பெரும்பத்துார் மற்றும் இராமலிங்கபுரம் கிராமத்திற்கும் இடையில் சுமார் 3 கிமீ இருக்கும். வாதிகள் 14, 15 க்கு தாவா இடத்தில் உள்ள தண்ணீர் மட்டும் பாத்தியதை உண்டு, ஜோசப் மகன் இருளன் என்பவர் அவர்களிடம் இருந்து 1927 ல் கிரையம் மேற்படி வாதிகளிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். ஆதாம் என்பவரின் மனைவி பெயர் பெருமாள் ஆகும். மேற்படி ஆதாம் – பெருமாள் தம்பதிக்கு வாரிசு கிடையாது என்றால் சரிதான். மேற்படி ஆதாம் இறந்த பிறகு ஆதாம் மனைவி பெருமாள் அனைவர் பாதுகாப்பிலும் இருந்து வந்தார். மேற்படி பெருமாளுக்கு பாத்தியப்பட்ட இடத்தை எங்களுக்கு எழுதி தரவில்லை என்றால் சரிதான். தபசில் 4 ல் 1 பாகத்தை நீதிமன்றம் மூலமாக கிருஷ்ண முதலியாருக்கு ஏலம் விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ண முதலியார் ஏலம் மூலம் பெற்ற சொத்தை சின்ன சேகரன் கிரையம் பெற்றுள்ளார். 10.10.1927 ல் யோசப் மக்கள் நால்வரும்சேர்ந்து பாக உடன்படிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றால் சரிதான். பெருமாளுக்கு பாத்தியப்பட்ட 60 செண்ட் இடத்தை நன்கொடையாக பாக்கியமுத்து என்பவருக்கு பிறப்பித்து கொடுத்துள்ளார். 4 வது நபர் பாக்கியமுத்துவிற்கு ஒரே வாரிசு செல்லையா ஆகும். மேற்படி செல்லையாவிற்கு வாரிசுகள் பெயர் மரியசெல்லையா, சின்ன ஜெயராஜ் பெரியஜெயராஜ் ஆகும். பெரியசேகரன் இறந்துபோய்விட்டார்.

மேற்படி பெரிய ஜெயராஜ் குறித்த தாவாசொத்தில் உள்ள பங்கு பற்றி தெரியாது. மேற்படி பெரிய ஜெயராஜ் க்கு வாரிசுகள் பாலசந்திரன், மற்றொரு பெண் மற்றும் ஆண் வாரிசு பெயர் பற்றி எனக்கு நினைவில்லை. எங்கள் ஊரில் 500 வீடுகள் உள்ளது. ஆதாம் மனைவி பெருமாள் என்பவர் பாக்கியமுத்து மகன் செல்லைய என்பவருக்கு எழுதி வைத்த நன்கொடை ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. தாவா கிணற்றில் தண்ணீர் இறைப்பது சம்பந்தமாக தான் பிரச்சனை என்றால் சரிதான். தண்ணீர் முறை 12 வருடங்களுக்கு முன்பு கொண்டு வந்தோம். தற்போது வழக்கு உள்ளதால் தண்ணீர் முறை எதுவும் 2 வருடங்களாக இல்லை. தாவா கிணறு சர்வே எண். 391/3 ஆகும். சர்வே எண். 409 ல் உள்ள சொத்துக்கள் கிணற்றிக்கு கிழக்கே உள்ளது. மேற்படி இடம் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 9 செண்ட் ஆகும். மேற்படி இடம் 2 ஏக்கர் 9 செண்ட்டில் கிணறு இல்லை. சர்வே எண். 409 ல் உள்ள இடத்தை யோசப் வாரிசுகள் ஆதாம், இருளன், போன்றோர் பாகம் வைத்துள்ளனர் என்றால் சரிதான். சர்வே எண். 409 ல் உள்ள இடத்திற்கும் தாவா கிணற்றிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சுமார் 3 ஆண்டுகாலமாக அந்தஇடத்தில் தண்ணீர் பாயச்சி விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ளதால் பாய்ச்சவில்லை. எனக்கு அறைகுறையாக எழுதபடிக்க தெரியும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**